(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 7(9).]

# பாராளுமன்றம்

## 7ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2013 பெப்புருவரி 22 வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

## 2013 மாச்சு 05, செவ்வாய்க்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

இலங்கை மின்சாரம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*

விளையாட்டுத்துறை அமைச்சர்,— விளையாட்டுக்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— தேசிய அரசுப் பேரவையின் 1973 ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க விளையாட்டுக்கள் சட்டத்தின் 31ஆம் பிரிவுடன் சேர்த்துவாசிக்கப்படும் அச்சட்டத்தின் 41ஆம் பிரிவின் கீழ் விளையாட்டுக்கள் அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2013 சனவரி 15 ஆம் திகதிய 1793/3 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.02.21ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

## 2013 ஏப்பிரல் 09, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1894/ '11

கௌரவ புத்திக பதிரண,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) குருநாகல் மாவட்டத்தின் பன்னல பிரதேச சபையினால் நிர்வகிக்கப்படுகின்ற மாகந்துர நகர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பசுமை நகரமொன்றையும் பசுமை விளையாட்டுத் தொகுதியொன்றையும் நிர்மாணிக்கின்ற பணிகள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் தற்போது இவற்றின் நிர்மாணப் பணிகள் இடைநடுவில் நிறுத்தப்பட்டுள்ளன என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இதன் நிர்மாணப் பணிகள் நிறுத்தப்பட்டமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி நிர்மாணப் பணிகளுக்காக நிதி வழங்கிய நிறுவனம் அல்லது நிறுவனங்கள் யாதென்பதையும்;

(iii) இதற்காக ஒதுக்கப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) பசுமை நகரத்தினதும் பசுமை விளையாட்டுத் தொகுதியினதும் நிர்மாணப் பணிகள் மீள ஆரம்பிக்கப்படுமா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்திகதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1935/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— பெற்றோலியக் கைத்தொழில்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2011 ஆம் ஆண்டு மே மாதம் முதல் யூலை மாதம் வரை தரக்குறைவான பெற்றோல் மற்றும் ஏனைய பெற்றோலிய உற்பத்திகளை இலங்கைக்கு விநியோகித்தவர் அல்லது விநியோகித்தவர்களையும்;

(ii) இந்த முறைகேட்டிலிருந்து அமைச்சு எவ்வாறு தவிர்க்கப்பட்டது என்பதையும்;

(iii) தரக்குறைவான பெற்றோல் உபயோகத்தால் பாதிப்புக்குள்ளான நுகர்வோரின் எண்ணிக்கையையும்;

(iv) தரக்குறைவான பெற்றோல் காரணமாக ஏற்பட்ட சேதங்கள் தொடர்பாக முறைப்பாடுகளை மேற்கொண்ட வாடிக்கையாளரின் பெயர்களையும்;

(v) பாதிப்படைந்த ஒவ்வொரு நுகர்வோருக்கும் வழங்கிய நட்டஈட்டை வெவ்வேறாகவும்;

(vi) தரம் குறைந்த பெற்றோல் காரணமாக இயந்திரங்கள் பழுதடைந்த எரிபொருள் நிலையங்களின் எண்ணிக்கையையும்;

(vii) அவ்வாறான எரிபொருள் நிலையங்களுக்கு எவ்வாறு நட்டஈடுகள் வழங்கப்படுகின்றன என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) தரக்குறைவான பெற்றோல் சூழ்ச்சித் திட்டத்தை வெளிச்சத்திற்கு கொண்டுவந்த தரப்பினருக்கு கவர்ச்சிகரமான மிகையூதியமொன்று வழங்கப்படுமா என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2139/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— வெகுசன ஊடக, தகவல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) ஊடகவியலாளர் திரு. பிரகீத் எக்னெலிகொட காணாமல் போன திகதி யாதென்பதையும்;

(ii) இவர் தற்போது உயிருடன் உள்ளாரா என்பதையும்;

(iii) சித்திரவாதைக்கு எதிரான சர்வதேச குழுவின் முன்னால் இலங்கை அரசு சார்பாக ஆஜராகிய திரு. மொஹான் பீரிஸ் திரு. பிரகீத் எக்னெலிகொட உயிருடன் உள்ளார் எனக் கூறியுள்ளாரா என்பதையும்;

(iv) அவர் அவ்வாறு கூறியிருந்தால் அவர் இருக்கின்ற நாடு அல்லது பிரதேசம் தொடர்பாக குறிப்பிடுவாரா என்பதையும்

(v) இவர் வெளிநாட்டுக்குச் சென்றிருப்பாராயின் இந்நாட்டுக்கு வரவழைத்துக் கொள்வதற்காக எடுக்கப்படும் நடவடிக்கை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேற்படி குழுவின் முன்னால் திரு. மொஹான் பீரிஸ் மேற்கொண்ட கூற்று தவறானதெனில் நாட்டின் உன்னதமான நிறுவனமொன்றில் உன்னதமான பதவியை வகித்த ஒருவர் இவ்வாறு போலியான தகவல்களை சர்வதேசத்திற்கு வழங்கி நாட்டுக்கு ஏற்படுத்திய பாரதூரமான கலங்கம் தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைக்காக யாதென்பதை அவர் மேலும் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2210 / '12

கௌரவ சஜித் பிரேமதாஸ,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு,பொது வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) மஹிந்த சிந்தனை, இலங்கையை வெற்றிபெறச் செய்வோம் கொள்கைகளில் ஜனசெவன நிகழ்ச்சித் திட்டத்தின்படி, குறை வருமானம் பெறுவோருக்கான நகர குடியேற்றக் கருத்திட்டத்தின் கீழ் வீடமைப்பதற்காக வழங்கப்பட்ட 2 பர்சஸ் காணித் துண்டுக்கான முழுமையான உரிமையை அக்காணிகளில் தற்போது வசிப்பவர்களுக்கு வழங்குவதாக வாக்குறுதியளிக்கப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தற்போது 2 பர்சஸ் காணிக்கான முழுமையான உரிமை கிடைக்கப்பெற்றுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2531/ '12

கௌரவ அனுர திசாநாயக்க,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையில் மருத்துவப் பீடங்களின் சிகிச்சை பயிற்சிக்கான பேராசிரியர் பிரிவுகளை (Professor unit) கொண்டுள்ள மருத்துவமனைகள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு பேராசிரியர் பிரிவுக்கும் 2012 மார்ச் மாதம் 31 ஆம் திகதியளவில் இணைக்கப்பட்டிருந்த பேராசிரியர்கள், நிபுணத்துவ மருத்துவர்கள், பட்டப்பின் படிப்பை மேற்கொள்ளும் மருத்துவர்கள் (Senior Registrar மற்றும் Registrar), சிரேஷ்ட மருத்துவ உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு பேராசிரியர் பிரிவுகளினதும் அலுவல்களுக்காக காணப்படும் சத்திரசிகிச்சை கூடங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) ரஜரட்ட மருத்துவ பீடத்தின் சிகிச்சைப் பயிற்சிக்கான அனுராதபுரம் பெரியாஸ்பத்திரியின் பேராசிரியர் பிரிவு ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) தற்போது மேற்படி பேராசிரியர் பிரிவில் பயிற்சி பெறும் மருத்துவ மாணவர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) அங்கு பயிற்சி பெறும் மருத்துவ மாணவர்களுக்கு கற்பிப்பதற்கு போதுமான மருத்துவர்கள், சத்திர சிகிச்சைக் கூடங்கள், வாட்டுகள் மற்றும் அவற்றை கொண்டு நடாத்துவதற்கு தேவையான பணியாட்டொகுதியினர் மற்றும் உபகரணங்கள் உள்ளதா என்பதையும்;

(iv) இன்றேல், மேற்படி அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு எவ்வளவு காலம் எடுக்கும் என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2548/ '12

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— பிரதம அமைச்சரும் பௌத்தசாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2009 இலிருந்து இற்றைவரை இலங்கைப் பொலீசுக்குக் கிடைத்துள்ள வன்புணர்ச்சி, பாலியல் துஷ்பிரயோகம் மற்றும் சிறுவர் துஷ்பிரயோக முறைப்பாடுகளின் எண்ணிக்கை மாவட்ட மட்டத்தில் தனித்தனியாக எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி முறைப்பாடுகளில் தற்போது விசாரணைகள் நிறைவு செய்யப்பட்டுள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2831/ '12

கௌரவ இரான் விக்கிரமரத்ன,— சிறுவர் அபிவிருத்தி, மகளிர் அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையிலுள்ள விதவைகள் பொருளாதார ரீதியாக உறுதித் தன்மையை அடைவதற்கு உதவும் வகையில் அரசாங்கத்தால் ஏதேனும் கொள்கைகள் நடைமுறைப்படுத்தப்படுகின்றனவா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், நடைமுறைப்படுத்தப்படும் அத்தகைய கொள்கைகள் யாவையென்பதையும்;

(iii) அத்தகைய பெண்களை சமூகத்துடன் மீண்டும் ஒருங்கிணைப்பதற்கு உதவும் ஏதேனும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றதா என்பதையும்;

(iv) அவ்வாறாயின், அது தொடர்பில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள திட்டம் யாதென்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2849/ '12

கௌரவ வசந்த அலுவிஹாரே,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) நுவரெலியா பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு உரித்தான இரண்டு மாடிக் கட்டடமொன்றை குத்தகைக்கு வழங்குவதற்காக 2011 டிசெம்பர் 19 ஆம் திகதி பத்திரிகை அறிவித்தல் மூலம் கேள்விப் பத்திரம் கோரப்பட்டதா என்பதையும்;

(ii) ஆமெனில், சமர்ப்பிக்கப்பட்ட விலை மனுக்கள் யாவை என்பதையும்;

(iii) அங்கீகரிக்கப்பட்ட நடைமுறைகளுக்கு அமைய கேள்விப் பத்திரங்கள் கோரலின் போது கவனத்தில் கொள்ளப்படுகின்றதும் முன்னுரிமை வழங்கப்படுகின்றதுமான விடயங்கள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேற்படி கட்டடத்தை,

(i) பெற்றுக் கொள்வதற்கு ரூபா 320,000/- மற்றும் ரூபா. 355,000/- என்றவகையில் விலை மனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன என்பதையும்;

(ii) கேள்விப் பத்திர விண்ணப்பத்தையேனும் சமர்ப்பிக்காத ஒருவருக்கு தற்போது வழங்கப்பட்டுள்ளது என்பதையும்;

(iii) குத்தகைக்கு வழங்குவதில் முறைகேடு இடம்பெற்றுள்ளது என்பதையும்;

(iv) முறைகேடான முறையில் வழங்கியதன் காரணமாக விண்ணப்பதாரர்களுக்கு அநீதியும், குறித்த கூட்டுறவுச் சங்கத்திற்கு நட்டமும் ஏற்பட்டுள்ளது என்பதையும்

அவர் ஏற்றுக் கொள்வாரா?

(இ) (i) உச்சளவான கேள்விப் பத்திரத்துக்கு கட்டடம் வழங்கப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) தற்போது கட்டடம் வழங்கப்பட்டுள்ளவரிடமிருந்து கூட்டுறவுச் சங்கம் பெற்றுக் கொள்கின்ற பணத் தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி, முறைகேடு தொடர்பாக முறையான விசாரணையை நடாத்தி கேள்விப் பத்திரதாரர்களுக்கு நீதியை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iv) ஆமெனில், அதற்கு காலம் எவ்வளவு எடுக்கும் என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2907/ '12

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) 2010ஆம் ஆண்டிலிருந்து 2011 திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை ஒவ்வொரு அமைச்சின் கீழும் சமர்ப்பிக்கப்பட்டுள்ள குறைநிரப்பு மதிப்பீடுகளின் எண்ணிக்கையும் அவற்றின் நிதி ரீதியிலான பெறுமதியும் வெவ்வேறாக எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2010 ஆம் ஆண்டிலிருந்து 2012 திசெம்பர் 31 ஆம் திகதி வரை தேசிய வரவு-செலவுத் திட்ட திணைக்களத்தின் 240 ஆம் இலக்க செலவுத் தலைப்பின் கீழ் உதவிச் சேவைகள் மற்றும் அவசர தேவைகள் பொறுப்புக் கருத்திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட குறைநிரப்பு ஒதுக்கீடுகள் பாராளுமன்றத்துக்கு சமரப்பிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி குறைநிரப்பு ஒதுக்கீடுகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) மேற்குறிப்பிட்ட காலகட்டத்தினுள் மேற்கொள்ளப்பட்ட ஒவ்வொரு குறைநிரப்பு ஒதுக்கீட்டுக்கும் ஏற்புடையதான,

(i) நிதி ஏற்பாடுகள் வழங்கப்பட்ட திகதி;

(ii) வழங்கப்பட்ட ஒவ்வொரு நிதி ஏற்பாட்டினதும் பெறுமதி;

(iii) குறைநிரப்பு நிதி ஏற்பாடுகள் பெற்றுக்கொள்ளப்பட்ட செலவுத் தலைப்பு இலக்கம்;

(iv) அமைச்சு/திணைக்களம் செலவு அலகு;

(v) நிதி ஏற்பாடுகள் வழங்கப்பட்டமைக்கான காரணம்

வெவ்வேறாக யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பரா?

(ஈ) குறைநிரப்பு மதிப்பீடுகள் சமர்ப்பிக்கப்படாது செலவுத் தலைப்பு 240 இன் கீழ் மேற்கொள்ளப்படும் குறைநிரப்பு ஒதுக்கீடுகள் மூலம் நிதி ஏற்பாடுகளை பெற்றுக்கொள்வதற்கு ஏதுவாக அமைந்த காரணங்கள் யாவை என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

3172/ '12

கௌரவ ஈ. சரவணபவன்,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மருதங்கேனி பிரதேச செயலாளர் பிரிவுக்கு உரித்தான கிராம அலுவலர் பிரிவுகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) இவற்றில் சேவையாற்றுகின்ற கிராம அலுவலர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(iii) மீள்குடியேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்ற இப்பிரதேசங்களில் காணப்படுகின்ற கிராம அலுவலர் பதவி வெற்றிடங்களை நிரப்ப துரித நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) யாழ்ப்பாண நிர்வாக மாவட்டத்தின் 15 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் காணப்படுகின்ற கிராம அலுவலர் பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) யாழ்ப்பாண மாவட்டத்தில் தற்போது காணப்படுகின்ற நிரந்தர கிராம அலுவலர்கள் இல்லாத பதில் கடமையாற்றுகின்ற கிராம அலுவலர் பிரிவுகளின் எண்ணிக்கை பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் தனித்தனியே எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3200/ '12

கௌரவ பி. ஹரிசன்,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வட மத்திய மாகாண சபையினால் அநுராதபுர மாவட்டத்தில் நிர்மாணிக்கப் பட்டுள்ள பால் விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி பால்விற்பனை நிலையங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ள இடங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி பால் விற்பனை நிலையமொன்றை நிர்மாணிப்பதற்கு செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி பால் விற்பனை நிலையங்களின் மாடுகளின் புகைப்படங்களுக்கு மேலதிகமாக வேறு ஆட்களின் புகைப்படங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், அப்புகைப்படங்கள் யாருடையதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இன்றளவில் மக்கள் பயன்பாட்டுக்காக திறக்கப்பட்டுள்ள மேற்படி பால் விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) பயன்படுத்தப்படாது மூடப்பட்டிருக்கும் பால் விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி பால் விற்பனை நிலையங்களை பேணிவரும் பொருட்டு ஆட்சேர்க்கப்பட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி ஊழியர்களின் நியமனங்கள் நிரந்தர, தற்காலிக மற்றும் சேவை தேவைப்பாடுகள் ஆகிய அடிப்படைகளில் எந்த அடிப்படையின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதையும்;

(v) மேற்படி பால் விற்பனை நிலையங்களுக்கு பால் விநியோகிக்கும் நிறுவனங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2143/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) ஹம்பாந்தோட்டையில் பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகளுக்கு நிதியிடுவதற்கு அரசாங்கத்திற்கு நிதிகள் வழங்கிய தனியார்துறை நபர்களின் பெயர்களையும்;

(ii) இலங்கையில் மேற்கூறப்பட்ட விளையாட்டுப் போட்டிகளை நடாத்துவதற்கு அவர்களது ஒத்துழைப்பினைப் பெற்றுக் கொள்வதற்கு இங்கு வரவழைக்கப்பட்ட நபர்களின் எண்ணிக்கை மற்றும் பெயர்களையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) இலங்கைக்கான அவர்களது ஒத்துழைப்பினைப் பெற்றுக் கொள்வதற்கு வெளிநாட்டிற்குச் சென்ற நபர்களின் எண்ணிக்கையையும்;

(ii) சென்றவர்களின் பெயர்களையும்;

(iii) ஏற்பட்ட மொத்தச் செலவினத்தையும்

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(இ) (i) 2011 நவெம்பர் மாதத்தில் புனித கிற்ஸ் இற்குச் சென்ற நபர்களின் எண்ணிக்கையையும்;

(ii) சென்ற நபர்களின் பெயர்களையும்;

(iii) மீள்வருகைப் பயணத்திற்கான மொத்தச் செலவினத்தையும்;

(iv) குறிப்பிடப்பட்ட பிரத்தியேக வாடகைக்கு அமர்த்திய விமானத்திற்கான செலவினத்தையும்;

(v) இலங்கை பொதுநலவாய விளையாட்டுப்போட்டிகளை நடாத்துவது தொடர்பில் வெற்றிபெறுவது நிச்சயம் என பெருமளவு நம்பிக்கையுடன் காணப்பட்ட பின்னர், அதனை எவ்வாறு இழந்தது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2148/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) தேசிய லொத்தர் சபைக்கு 2005ஆம் ஆண்டு தொடக்கம் இற்றை வரை ஆட்சேர்க்கப்பட்டுள்ள பதவியணியினரின் எண்ணிக்கை வருட வாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) மேற்படி நிறுவனத்திற்கு அங்கீகரிக்கப்பட்டுள்ள பதவியணியினர் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) தற்போது அங்கு நிலவுகின்ற ஊழியர் மிகை அல்லது ஊழியர் பற்றாக்குறை யாதென்பதையும்;

(iv) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கையை விஞ்சுகின்ற வகையில் ஆட்சேர்க்கப்பட்டிருப்பின் அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(v) மிகையாக பணியாட்களை ஆட்சேர்ப்பதற்கு அங்கீகாரம் வழங்கிய அதிகாரியின் பெயர் மற்றும் பதவி யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2223/ '12

கௌரவ சஜித் பிரேமதாஸ,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) மஹிந்த சிந்தனை தொலை நோக்குக் கொள்கைகளில் "செமட நிவசக்-ஹிதட செவனக்" வேலைத் திட்டத்தின் கீழ், கொழும்பு நகரில் குடிசைவாழ் மக்களின் வீட்டுப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக 40,000 வீட்டுக்கூறுகளடங்கிய 20 மாடி வீட்டுத் திட்டங்கள் கொழும்பு மற்றும் புறநகர்ப் பகுதியில் நடைமுறைப்படுத்துவதற்காக 500 கோடி ரூபாவை ஆரம்ப மூலதனமாக அடுத்து வரும் வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்குவதாக வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா ?

(ஆ) (i) மேற்படி வாக்குறுதியின் பிரகாரம் 500 கோடி ரூபா எந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டது என்பதையும்;

(ii) குறித்த பணத்தைக் கொண்டு இன்றளவில் நிர்மாண பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள மாடிவீட்டுத் திட்டங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) இன்றளவில் நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள மாடிவீட்டுத் திட்டங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) நிர்மாணப் பணிகள் பூர்த்தியாகியுள்ள மாடிவீட்டுத் திட்டங்களில் இன்றளவில் குடியமர்த்தப்பட்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2980/ '12

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பகிரங்க அறிவித்தல் அல்லது விண்ணப்பம் கோரல் எதுவுமின்றி சுமார் 400 பதிலீட்டுத் தொழிலாளர்கள் புகையிரதத் திணைக்களத்துக்கு ஆட்சேர்க்கப்பட்டுள்ளார்கள் என்பதையும்;

(ii) ஏற்கனவே குறிப்பிடத்தக்களவு ஊழியர்களைக் கொண்டுள்ள புகையிரதத் திணைக்களத்துக்கு மேலும் பதிலீட்டு ஊழியர்களை ஆட்சேர்ப்பதனால் மேற்படி திணைக்களம் மென்மேலும் நட்டமடைகின்ற ஒரு நிறுவனமாக மாறும் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு புகையிரதத் திணைக்களத்துக்கு மேலதிக ஊழியர்கள் ஆட்சேர்க்கப்பட்ட நடைமுறை யாது;

(ii) இவ்வளவு எண்ணிக்கையான ஊழியர்கள் எந்த உத்தியோகத்தரது மேற்பார்வையின் கீழ் இணைத்துக்கொள்ளப்பட்டார்கள்;

(iii) மேற்படி ஊழியர்களின் ஆட்சேர்ப்புடன் தொடர்புடைய உத்தியோகத்தர்கள் தொடர்பில் முறைசார்ந்ததொரு விசாரணை நடத்தப்படுமா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

## 2013 ஏப்பிரல் 23, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2315/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— தொழில், தொழில் உறவுகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(2)

(அ) (i) 1958 ஆம் ஆண்டின் ஊழியர் சேமலாப நிதியச் (EPF) சட்டம் 2012 சனவரி 18ஆம் திகதியன்று திருத்தப்பட்டமையையும்;

(ii) காணி கொள்வனவு செய்வதற்கும் கட்டிடமொன்றை நிர்மானிப்பதற்கும் ஊழியர் சேமலாப நிதியத்திலுள்ள பணத்தை உபயோகப்படுத்தக்கூடியவாறு திருத்தம் மேற்கொள்ளப்பட்டமையையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) மேற்சொன்ன கட்டிடத்திற்கென மதிப்பீடு செய்யப்பட்ட மொத்தச் செலவினத்தையும்;

(ii) அக்கட்டிடத்தின் ஒரு சதுர அடிக்கு மதிப்பீடு செய்யப்பட்ட செலவினத்தையும்;

(iii) அக்கட்டிட நிர்மாணத்திற்குக் கோரப்பட்ட கேள்விப்பத்திரங்களின் பெயர்கள் மற்றும் ஒவ்வொரு கேள்விப் பத்திரதாரரினதும் வினைமனுப் பெறுமதி ஆகியவற்றை வெவ்வேறாகவும்;

(iv) அக்கட்டிடத்தின் தேவைப்பாட்டை 35 மாடிகளாக திட்டமிடலுக்குப் பொறுப்பாகவிருந்த நபரையும்

அவர் கூறுவாரா?

(இ) (i) கட்டிட நிர்மாணங்களில் ஊழியர் சேமலாப நிதியம் ஏன் வீண்விரயம் செய்யப்படுகின்றதென்பதையும்;

(ii) மேற்படி பணிக்காக அரச நிதியங்கள் பயன்படுத்தப்படாமைக்கான காரணத்தையும்

அவர் கூறுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2459/ '12

கௌரவ புத்திக்க பத்திரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சேனாதிபதி ஹென்ரி ஸ்டீல் ஓல்கட் அவர்களால் 1890இல் ஆரம்பிக்கப்பட்ட கண்டி ஸ்ரீ ராஹுல வித்தியாலத்துடன் இணைந்ததாக நெசவுக் கைத்தொழில் பாடசாலை ஒன்று பேணிவரப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) 1962 இல் மேற்படி பாடசாலை அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட்ட பின்னர் அந் நெசவுத் தொழில் பாடசாலையில் சேவையாற்றிய ஈ.கெக்குலாவல என்பவருக்கு பாடசாலை ஆதனங்களிலிருந்து வெளியேறுமாறு மத்திய மாகாண கல்விப் பணிப்பாளரின் ம/நி/பொ.நி.சு/293 ஆம் இலக்க 1965.07.26 ஆம் திகதிய கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டள்ளது என்பதையும்;

(iii) கெக்குலாவல என்பவர் அதற்கமைய செயற்படவில்லை என்பதுடன் அவரின் பின்னர் எம்.ஜே. மெண்டிஸ் என்பவரும் அங்கு அத்துமீறிக் குடியமர்ந்துள்ளார் என்பதையும்;

(iv) இவருக்கு எதிராக மத்திய மாகாண கல்விப் பணிப்பாளரினால் தொடரப்பட்ட 75269 ஆம் இலக்க வழக்கின் 1988.03.08 ஆம் திகதிய தீர்ப்பின் மூலம் பாடசாலை வளவிலிருந்து வெளியேறுமாறு வழங்கப்பட்டுள்ள உத்தரவிற்கு அமைய அவர் இதுவரை செயலாற்றவில்லை என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) பாடசாலை வளவுக்குள் அத்துமீறி வசிக்கும் ஒருவர் இருப்பது பாடசாலை நிர்வாகத்திற்கு பெரும் தடையாக உள்ளதென்பதை ஏற்றுக் கொள்கிறாரா என்பதையும்;

(ii) ஆமெனில், நீதிமன்றத் தீர்ப்புக்கு அமைய அல்லது வேறு சட்டரீதியான முறையில் இவரை அகற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2508/ '12

கௌரவ சஜித் பிரேமதாஸ,— நீர்ப்பாசன, நீர் வள முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) வன்னி மாவட்டத்தில் மகாவலி எல் (L) வலயத்தின் கீழ் நடைமுறையிலுள்ள வெலிஓயா திட்டத்திற்குரிய குளங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி குளங்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு குளத்திலிருந்தும் எத்தனை ஏக்கர் வயற்காணிகள் நீரைப்பெறுகின்றன என்பதை வெவ்வேறாகவும்;

(iv) ஒவ்வொரு குளத்தின் ஊடாகவும் பயிர்செய்கை செய்யப்படுகின்ற வயற்காணிகள் அமைந்துள்ள கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் வெவ்வேறாக யாவையென்பதையும்;

(v) ஏற்புடைய விவசாய குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) போதியளவு நீர் கிடைக்காததால் வெலிஓயா திட்டத்தின் கீழ் பயிர்செய்கையில் ஈடுபடுகின்ற விவசாயிகள் தங்களது பயிச்செய்கை நடவடிக்கைகளை ஒரு போகத்திற்கு மாத்திரம் மட்டுப்படுத்திக்கொள்ளும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள் என்பதையும்;

(ii) இதன் விளைவாக இவர்கள் பெரும் கஷ்டங்களுக்கு முகம்கொடுத்துள்ளார்கள் என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) (i) வெலிஓயா திட்டத்தின் நீர்ப்பாசன நீர் பற்றாக்குறை காரணமாக தோன்றியுள்ள சிக்கல்களை தீர்ப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(ii) இந் நடவடிக்கைகளை அமுல்படுத்துவதற்கு எவ்வளவு காலம் செல்லும் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2539/ '12

கௌரவ அனுர திசாநாயக்க,— சிவில் விமானச் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(3)

(அ) (i) ஸ்ரீ லங்கன் எயார் லைன்ஸ் நிறுவனத்தின் தலைவர் மற்றும் பணிப்பாளர் சபையின் ஒவ்வொரு அங்கத்தவரும் 2009 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றை வரை மேற்கொண்டுள்ள வெளிநாட்டுப் பயணங்களின் எண்ணிக்கை தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு பயணத்திற்குரிய நாடுகள், பயணத்தின் நோக்கம், பெற்றுக்கொண்ட பெறுபேறுகள் ஒவ்வொரு பயணத்திற்கும் ஏற்ப தனித்தனியே யாவை என்பதையும்

(iii) ஒவ்வொரு பயணத்திற்குமென அந்தந்த நபர்களுக்காக செலவிடப்பட்ட பணத்தொகை தனித்தனியே எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2637/ '12

கௌரவ தயாசிறி ஜயசேகர,— இடர் முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) சுனாமியொன்று ஏற்படும் சந்தர்ப்பத்தில் தகவல்களைப் பெறுவதற்காக இலங்கையை அண்டியுள்ள கடற்பரப்பில் தாபிக்கப்பட்டுள்ள சுனாமி தகவல் அறியும் கோபுரங்கள்,

(i) எத்தனை என்பதையும், அவற்றை தாபிப்பதற்கு செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) தாபிக்கப்பட்ட திகதிகள், அவற்றினூடாக தகவல்களை பெற்றுக்கொள்ளும் நிறுவனங்கள் மற்றும் இக்கோபுரங்களினூடாக சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் தகவல்கள் அறிந்த பின்னர் இலங்கைக்கு அத்தகைய சுனாமியினால் தாக்கம் விளைவதற்கு எடுக்கும் நேரம் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2012.04.11ஆம் திகதி அல்லது அதற்கு அண்மியதொரு தினத்தில் சுமாத்திராவில் நிகழ்ந்த சுனாமி நிலை இலங்கைக்கு தாக்கம் விளைவிக்குமென எமது சுனாமி கோபுரங்களிலிருந்து தகவல்கள் பெறப்பட்டதா என்பதையும்;

(ii) இல்லையெனில், சம்பந்தப்பட்ட சுனாமி நிலை தொடர்பாக மக்களை அறிவூட்டுவதற்கு உரிய தகவல்கள் எவ்வாறு பெறப்பட்டன என்பதையும்;

(iii) மேற்படி (ஆ)(ii) இற்கு ஏற்ப வேறு விதத்தில் தகவல்கள் பெறப்பட்டதாயின் சுனாமி பற்றிய தகவல்களை பெற்றுக்கொள்வதற்காக இலங்கையில் சுனாமி கோபுரங்கள் தாபிக்கப்பட்டதன் நோக்கம் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2830/ '12

கௌரவ இரான் விக்கிரமரத்ன,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) வைத்தியசாலைகளில் பயன்படுத்தப்படும் மருத்துவக் கையுறைகளின் வழங்குநர்களைத் தெரிவுசெய்யும் முறை யாதென்பதையும்;

(ii) மருத்துவக் கையுறைகளைக் கொள்வனவு செய்யத் தீர்மானம் மேற்கொள்ளும் நபர்களின் பெயர்கள் மற்றும் பதவிகள் யாவையென்பதையும்;

(iii) வழங்கல் திகதி, வழங்கல் காலப்பகுதி மற்றும் ஒப்புக்கொண்ட காலத்தினுள் வழங்க முடியாமை என்பன தொடர்பாக வழங்கல் ஒப்பந்தத்திலுள்ள நியம வாசகங்கள் யாவையென்பதையும்;

(iv) 2008, 2009, 2010 மற்றும் 2011ஆம் ஆண்டுகளில் மருத்துவக் கையுறைகளின் கொள்வனவுக்காக ஒதுக்கப்பட்ட தொகைகள் மற்றும் செலவு செய்யப்பட்ட தொகைகள் போன்றன தனித்தனியாக யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) முதற்கட்ட விசாரணையில் மருத்துவக் கையுறைகளின் கொள்வனவு தொடர்பாக முறைகேடொன்று வெளிக்கொணரப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) இம்முறைகேடு மேலதிக விசாரணைக்காக நிதி, திட்டமிடல் அமைச்சுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளது என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) (i) மேற்கூறப்பட்ட முறைகேட்டின் தன்மை யாதென்பதையும்;

(ii) முறைகேட்டினால் ஏற்பட்ட பண நஷ்டத்தையும்;

(iii) விசாரணையானது ஆ(ii) இன் படி நடைபெற்றிருப்பின், அதன் விளைவுகளையும்

அவர் கூறுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2981/ '12

கௌரவ அகில விராஜ் காரியசம்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புளத்சிங்கள வைத்தியசாலையில் போதியளவு தாதியர்கள், சுகாதார முகாமைத்துவ உதவியாளர்கள், மருத்துவ இரசாயனவியலாளர்கள், நிபுணத்துவ மருத்துவர்கள், துப்பரவேற்பாட்டு தொழிலாளர்கள், எழுதுவினைஞர்கள் மற்றும் நோயாளர் காவு வண்டிகள் இல்லையென்பதையும்;

(ii) மேற்படி குறைபாடுகள் காரணமாக நோயாளர்கள் கடும் நிர்க்கதி நிலைமைக்கு உள்ளாகியுள்ளனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) புளத்சிங்கள வைத்தியசாலைக்கு ஒரு நாளைக்கு சிகிச்சை பெறுவதற்காக வரும் நோயாளர்களின் எண்ணிக்கை யாது;

(ii) இங்கு நிலவுகின்ற குறைபாடுகள் தொடர்பில் அறிக்கையொன்றை சமர்ப்பிப்பாரா;

(iii) புளத்சிங்கள பிரதேச மக்களின் ஆரோக்கிய நிலைமையை மேம்படுத்துவதற்காக மேற்படி வைத்தியசாலையில் நிலவும் அனைத்து குறைபாடுகளையும் நிவர்த்தி செய்து தருவதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3136/ '12

கௌரவ அஜித் பி. பெரேரா,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2012 ஏப்பிரல் 30ஆம் திகதி தொடக்கம் மே மாதம் 30ஆம் திகதி வரையிலான காலம் "இராணுவ வீரர் மாதம்" எனும் பெயரில் கொண்டாடப்பட்டதா என்பதையும்;

(ii) குறிப்பிட்ட "இராணுவ வீரர் மாதத்துக்கு" ஏற்றவாறு "இராணுவ வீரர் கொடிகள்" அமைக்கப்பட்டதா என்பதையும்;

(iii) அவ்வாறாயின் இந்த இராணுவ வீரர் கொடிகளை அமைப்பதற்கு செலவாகிய பணத்தொகை யாது என்பதையும்;

(iv) இராணுவ வீரர் கொடிகளை விற்றுப் பெறப்பட்ட வருமானம் எவ்வளவு என்பதையும்;

(v) இராணுவ வீரர் நிதியத்துக்கான உண்டியல்களை உற்பத்தி செய்வதற்கு செலவு செய்யப்பட்ட பணத்தொகை யாது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3196/ ’12

கௌரவ ரஞ்சன் ராமநாயக்க,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் பதிவு செய்யப்பட்டு, சவுதி அரேபியாவில் வீட்டுப் பணிப் பெண்களாகவும் மற்றும் பிற வேலைவாய்ப்புகளின் நிமித்தமும் சென்றுள்ள பெரும் எண்ணிக்கையிலான இலங்கைப் பெண்களும் ஆண்களும் கடுமையாக துன்புற்று தற்போது அந்நாட்டில் “ஒலாயா” தடுப்பு முகாமிலும் “ஜித்தா பாலத்திற்குக் கீழும்” தங்கியுள்ளனர் என்பதையும்;

(ii) சம்பந்தப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் பொருத்தமான தொழில் அமைவிடங்கள் கிடைக்காமை, துன்புறுத்தல்கள் மற்றும் ஊதியம் செலுத்தப்படாமை போன்ற பல்வேறு விடயங்கள் அதற்குக் காரணமாய் அமைந்துள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி இலங்கையர்களை உடனடியாக இந் நாட்டிற்கு அழைத்து வர நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) இவர்களது குடும்பங்களின் பாதுகாப்பு, நலனோம்புகை மற்றும் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு துரித கதியில் நடைமுறைப்படுத்தக் கூடிய நடைமுறைச் சாத்தியமான வேலைத்திட்டமொன்றை அமுல்படுத்த நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3201/ ’12

கௌரவ பி. ஹரிசன்,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கமத்தொழில் திணைக்களத்துக்குச் சொந்தமான விதைப் பண்ணைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி பண்ணைகளில் நெல் தொடர்பாக வேறு தானியங்கள் தொடர்பாக வேறு நடவடிக்கைகள் தொடர்பாக ஆராய்ச்சிகளை மேற்கொள்கின்ற பண்ணைகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு பண்ணைக்கும் சொந்தமான காணிகளின் ஹெக்டெயார் அளவுகள் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மஹா இலுப்பள்ளம் களப்பயிர் ஆராய்ச்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் 2005 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரை மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சி நடவடிக்கைகள் மூலம் புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட பயிர் வகைகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி புதிய பயிர் வகைகளில் விவசாயிகளுக்கு அறிமுகப்படுத்தப்பட்ட பயிர் வகைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) இதுவரை பத்தலகொட மற்றும் ஏனைய கமத்தொழில் ஆராய்ச்சி நிறுவனங்களினால் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய நெல் வகைகள் ஒவ்வொரு நிறுவனத்துக்கமைய வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iv) இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள பாஸ்மதீ நெல் வகைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(v) மேற்படி பாஸ்மதீ வகைகளின் பெயர்களும் கண்டுபிடிப்பை மேற்கொண்ட நிறுவனங்களும் யாவை என்பதையும்;

(vi) தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ள புதிய நெல், தானியங்கள், பழவகைகள் மற்றும் மரக்கறி வகைகளின் விதைகளை கொள்வனவு செய்யக்கூடிய நிலையங்கள் காணப்படுகின்றதா என்பதையும்;

(vii) மேற்படி நிலையங்கள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3208/ '12

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1994 ஆம் ஆண்டு கொள்கை திட்டமிடல், அமுலாக்கல் அமைச்சினால் ஆரம்பிக்கப்பட்ட மருதானை திரிபொலி வர்த்தகத் தொகுதி என்றதொரு இடம் உள்ளதென்பதையும்;

(ii) நாடு முழுவதும் பரந்திருந்த கொள்வனவு செய்யும் நிலையங்களை பேணிவந்த சுமார் 350 வர்த்தகர்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 21 பிரதிநிதிகளின் சொந்தப் பணத்திலிருந்து திரிபொலி வர்த்தக தொகுதியின் கட்டடம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது என்பதையும்;

(iii) தற்போது மேற்படி வர்த்தக நிலையத்திற்கு பக்கத்தில் மேற்கொள்ளப்படுகின்ற இராணுவ நடவடிக்கைகள் காரணமாக தொழில்முயற்சி நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது மேற்படி வர்த்தகர்கள் நிர்க்கதி நிலைக்கு ஆளாகியுள்ளார்கள் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வர்த்தக நிலையத்தின் தற்போதைய பொறுப்பாளர்கள் யாவர் என்பதையும்;

(ii) உயர் பாதுகாப்பு வலயங்களும் திறந்து விடப்பட்டுள்ள இச் சந்தர்ப்பத்தில் மேற்படி வர்த்தக நிலையத்திற்கு உட்பிரவேசிக்கின்ற பாதைகள் மூடப்பட்டுள்ளமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) அதன் உரிமையாளர்கள் தொழில்முயற்சி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக மேற்படி நிலையம் வழங்கப்படுமா என்பதையும்;

(iv) இல்லையெனின், மாற்று வழிகள் செய்து கொடுக்கப்படுமா என்பதையும்;

(v) மாற்றுவழி செய்து கொடுக்கப்படுமாயின், அது யாது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2318/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2011 ஆம் ஆண்டில்,

(i) நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சரினால் வீடுகள் கட்டுவதில் செலவழித்த தொகையையும்;

(ii) கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கையையும்;

(iii) அவ்வீடுகள் கட்டப்பட்டிருக்கும் அமைவிடங்களையும்

அவர் கூறுவாரா?

(ஆ) 2012 ஆம் ஆண்டில்,

(i) வீடமைத்தலுக்காக ஒதுக்கப்பட்ட தொகையையும்;

(ii) அதே விடயத்தில் இற்றைவரை செலவழித்த தொகையையும்;

(iii) புதிதாக கட்டப்பட்ட வீடுகளின் அமைவிடங்களையும்

அவர் மேலும் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2509/ '12

கௌரவ சஜித் பிரேமதாஸ,— சிறுவர் அபிவிருத்தி, மகளிர் அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வட மாகாணத்தின் சம்பத்நுவர பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசத்தில் பேணப்பட்டு வருகின்ற முன்பள்ளிகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி முன்பள்ளிகள் பேணிவரப்படுகின்ற கிராமங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி முன்பள்ளிகளில் பல பௌதீக வளப் பற்றாக்குறைகள் காணப்படுகின்றதென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) இக்குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(iii) இக்குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காக எடுக்கும் காலம் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2638/ '12

கௌரவ தயாசிறி ஜயசேகர,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை கடன் தகவல்கள் பணியகத்தினால் நிறைவேற்றப்படும் கடமைப்பொறுப்பு யாதென்பதையும்;

(ii) அதில் பணியாற்றும் ஊழியர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) அது அமைந்துள்ள இடம் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி பணியகத்திற்காக கணனி மென்பொருள் தொகுதியொன்று கொள்வனவு செய்யப்பட்டு அல்லது கொள்வனவு செய்யப்பட ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) இதற்காக செலவிடப்பட்ட அல்லது செலவிடப்படவுள்ள பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி மென்பொருள் தொகுதி கொள்வனவு செய்யப்பட்ட அல்லது கொள்வனவு செய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்படும் நாடு யாதென்பதையும்;

(iv) அரசின் ஏற்றுக்கொள்ளப்பட்ட செயல்முறைகளுக்கு அமைவாக மேற்படி கொள்வனவு மேற்கொள்ளப்பட்டுள்ளதா அல்லது மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) மேற்படி மென்பொருள் தொகுதி கொள்வனவு செய்யப்படுவதன் நோக்கம் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2982/ '12

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஆசிரியர்களின் தொழில் கௌரவத்தை பாதுகாக்கும் விதத்தில் வாழ்க்கைச் செலவுக்கு ஏற்ப நிலையான சம்பளத் திட்டமொன்று தயாரிக்கப்படவில்லை என்பதையும்;

(ii) கல்வி அமைச்சு உடன்பட்டுள்ளவாறு, இடைக்கால சம்பளத் திட்டத்தை நிலுவைச் சம்பளத்துடன் வழங்குவதற்கான எந்தவொரு செயல்முறையும் இதுவரை தயாரிக்கப்படவில்லை என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேலே குறிப்பிட்டுள்ள இடைக்கால சம்பளத் திட்டத்தை நிலுவைச் சம்பளத்துடன் வழங்குவதற்கு இதுவரை இயலாமற்போனமைக்கான காரணங்கள் யாவை;

(ii) மேற்படி இடைக்கால சம்பளத் திட்டத்துக்கு அமைய ஆசிரியர்களுக்கு கிடைக்க வேண்டிய மொத்த நிலுவைச் சம்பளம் யாது;

(iii) சம்பளப் பிரச்சினைக்கு மேலதிகமாக ஆசிரியர் – அதிபர் ஒன்றியத்தினால் முன்வைக்கப்பட்ட ஏனைய கோரிக்கைகளை நிறைவேற்றிக்கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா;

(iv) ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களுக்கான நிலையான சம்பளத் திட்டமொன்றைத் தயாரித்து இவர்களுக்கு சம்பளம் வழங்குவதற்கு எவ்வளவு காலம் எடுக்கும்

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# 2013 ஏப்பிரல் 24, புதன்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

1601/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2004.01.01 முதல் இன்று வரை குற்றஞ்சாட்டப்பட்ட பின்னர் சட்டமா அதிபரினால் திரும்பப் பெறப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கையையும்;

(ii) அவ்வாறான வழக்குகளினதும் குற்றஞ்சாட்டப்பட்டவர்களினதும் பெயர்களையும், அவ்விதக் குற்றப் பகர்வுகள் மேற்கொள்ளப்பட்ட திகதிகளையும்;

(iii) மேற்படி குற்றப் பகர்வுகள் வழங்கப்பட்டமை, பின்னர் அவை திரும்பப் பெறப்பட்டமை ஆகியவற்றுக்கான காரணங்களையும்;

அவர் கூறுவாரா?

(ஆ) (i) ஒரு குற்றப் பகர்வை திரும்பப் பெறுதல் தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு ஏற்படுகின்ற செலவையும்;

(ii) இதுதொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களத்தின் சார்பாகத் தோன்றிய சட்டத்தரணிகளது பெயர்களையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1829/ '11

கௌரவ புத்திக பத்திரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தின் தெனியாய கல்விக் காரியாலயத்திற்குரிய மொரவக்க, கொட்டபொல மற்றும் பஸ்கொட கோட்டக் கல்விக் காரியாலயத்தினால் நிருவகிக்கப்படும் அரச பாடசாலைகளில் கஷ்டப் பிரதேச சேவைக்காலத்தை பூர்த்தி செய்த பின்னர் இடமாற்றம் கிடைக்காததனால் பெரும் விரக்திக்கு உள்ளாகியுள்ள ஆசிரியர்கள் பெருமளவில் இருக்கின்றார்கள் என்பதையும்;

(ii) இதன் காரணமாக இவ்வாசிரியர்களின் கற்பித்தல் தரம் குறைவடையலாம் என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) ஆசிரியர் இடமாற்ற சபைகளின் தீர்மானத்திற்கேற்ப இடமாற்றத்தின் பொருட்டு பூர்த்திசெய்யவேண்டிய ஆகக்குறைந்த தகைமைகள் யாவையென்பதையும்;

(ii) தற்போது மேற்படி கல்வி வலயத்தில் கஷ்டப்பிரதேச சேவைக் காலத்தை பூர்த்தி செய்ததன் பின்னர் இடமாற்றம் கோரியுள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) இவர்களுக்கு இடமாற்றம் வழங்குவதற்கான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) மேற்படி முறையியல் யாதென்பதையும்;

(v) இதற்கேற்ப இடமாற்றம் வழங்கப்படுமாயின் அத்தேதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2511/ ’12

கௌரவ சஜித் பிரேமதாஸ,— நீர் வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) வட மாகாணத்தில் சம்பத்நுவர பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசத்தினுள் சுத்தமான குழாய் குடிநீர் வழங்கப்படும் கிராமங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசத்தினுள் சுத்தமான குழாய் குடிநீர் வழங்கப்படாத கிராமங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி கிராமங்களுக்கு சுத்தமான குடிநீரை வழங்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iv) ஆமெனில் அது எக்கால கட்டத்தினுள் என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2698/ ’12

கௌரவ தயாசிறி ஜயசேகர,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) டெங்கு ஒழிப்புக்காக கியூபாவிலிருந்து BTI பற்றீரியா கொண்டுவரப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) மேற்படி பற்றீரியா எவ்வளவு கொண்டுவரப்பட்டது என்பதையும்;

(iii) இதற்கென செலவான மொத்தப் பணத் தொகை யாதென்பதையும்;

(iv) குறித்த பணம் செலவிடப்பட்ட விதம் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) BTI பற்றீரியா இலங்கையில் டெங்கு ஒழிப்புக்குப் பொருத்தமானதென சிபாரிசு செய்தவர்கள் யாவர் என்பதையும்;

(ii) இந்நாட்டில் டெங்கு ஒழிப்புச் செயற்பாட்டிற்காக குறித்த பற்றீரியா பயன்படுத்தப்பட்டுள்ள அளவு யாதென்பதையும்;

(iii) மேற்கூறிய பற்றீரியா கொண்டுவரப்பட்டு பயன்படுத்தப்பட்டதன் ஊடாக டெங்கு ஒழிப்பின்போது இன்றளவில் அடையப்பெற்றுள்ள முன்னேற்றம் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2870/ ’12

கௌரவ இரான் விக்கிரமரத்ன,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) நுழைவுத் தேவைப்பாடொன்றாக கலைகள் பல்கலைக்கழகத்தினால் நடத்தப்பட்ட நுண்ணறிவுப் பரீட்சை முடிவுறுத்தப்பட்டமைக்கான காரணங்களையும்;

(ii) மேற்குறிப்பிடப்பட்ட நுண்ணறிவுப் பரீட்சையை முடிவுறுத்துவதற்கான தீர்மானம் மேற்கொள்ளப்படுவதற்கு முன்னர், பல்கலைக்கழக அதிகாரிகளுடன் ஏதாவது கலந்துரையாடல்கள் நடைபெற்றனவா என்பதையும்;

(iii) இல்லையெனில், அத்தகைய கலந்துரையாடல்களை மேற்கொள்ளாமைக்கான காரணம் என்னவென்பதையும்;

(iv) அவ்வாறெனில், நுழைவுத் தேவைப்பாடாதிய நுண்ணறிவுப் பரீட்சையை முடிவுறுத்துவது தொடர்பில் பல்கலைக்கழக அதிகாரிகளினால் மேற்கொள்ளப்பட்ட நிலைப்பாடு என்னவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தம்முடன் நல்லுறவைப் பேணும் பரீட்சார்த்திகளுக்கு விரிவுரையாளர்கள் சலுகை காட்டுகின்றனர் என்ற அடிப்படையில் நுண்ணறிவுப் பரீட்சை துஷ்பிரயோகமிக்கது என பரீட்சார்த்திகளிடமிருந்து மனுக்கள் அமைச்சிற்கோ அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கோ கிடைக்கப் பெற்றனவா என்பதையும்;

(ii) அவ்வாறெனில், இது தொடர்பில் புலனாய்வோ அல்லது விசாரணையோ ஏன் மேற்கொள்ளப்படவில்லையென்பதையும்;

(iii) மேற்படி பரீட்சையின் வெளிப்படைத் தன்மையை மேம்படுத்துவதற்கு அமைச்சு முயன்றுள்ளதா என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2984/ ’12

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— மீள்குடியேற்ற அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) யுத்தத்தால் இடம்பெயர்ந்த வடக்கு மாகாண முஸ்லிம் மக்கள் குடியமரும் போது தேவையான பதிவுகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் வழங்கப்படுமென அளித்த வாக்குறுதியின் அடிப்படையில் தமது பூர்வீக நிலங்களுக்கு மீண்டும் புலம்பெயர்ந்துள்ளனர் என்பதையும்;

(ii) இவ்வாறான 32,000 குடும்பங்களுக்குத் தேவையான பதிவு, உட்கட்டமைப்பு வசதிகள், கல்வி வசதிகள் ஆகியவற்றை பெற்றுக்கொடுப்பதற்காக இற்றைவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதையும்;

(iii) இன்றளவில் மேற்படி பிரச்சினை தொடர்பில் ஏறத்தாழ 1400 சுற்றுப் பேச்சுவார்தைகளின்போது விடயங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) 2012 ஆம் ஆண்டினுள் மீண்டும் சொந்த கிராமங்களை நோக்கி புலம்பெயர்ந்துள்ள இடம்பெயர்ந்த முஸ்லிம்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) புலம்பெயர்ந்த மேற்படி மக்களில் இன்றளவில் பதிவு செய்யப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) இடம்பெயர்ந்த முஸ்லிம்களை மீளக்குடியமர்த்துவதற்குத் தேவையான நிதி ஏற்பாடுகள் அரச சார்பற்ற அமைப்புக்களினூடாக வழங்கப்பட்டிருக்கையில்; தேவையான பதிவுகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை பெற்றுக்கொடுக்காமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iv) பிரிதொரு நாடு தலையிட்டு மேற்படி பிரச்சினையை தீர்ப்பதற்கு முன்னர் உரிய வசதிகளையும் பதிவுகளையும் இவர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3137/ '12

கௌரவ அஜித் பி.பெரேரா,— புனர்வாழ்வளிப்பு, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2005 முதல் 2012.06.01 வரையிலான காலகட்டத்தில் அரசியலமைப்பின் 34 ஆம் உறுப்புரையின் பிரகாரம் சனாதிபதியினால் வழங்கப்படுகின்ற மன்னிப்பின் கீழ் விடுதலை பெற்றுள்ள மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்த,

(i) சிறைக் கைதிகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு கைதியும் "மரண தண்டனைக்கு உட்படுத்தப்பட்ட சிறைக் கைதியாக" சிறைச்சாலையில் கழித்துள்ள காலம் எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு சிறைக் கைதியும் விடுதலை செய்யப்பட்ட திகதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) அரசியலமைப்பின் 34ஆம் உறுப்புரையின் பிரகாரம் தற்போதைய சனாதிபதியினால் வழங்கப்பட்ட மன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்பட்டவர்களில் இருந்த,

(i) கொலைக் குற்றவாளிகளாக இருந்தவர்கள் யாவர் என்பதையும்;

(ii) ஹெரொயின் வியாபாரம் சம்பந்தமாகவோ அல்லது தம்வசம் வைத்திருத்தல் சம்பந்தமாகவோ குற்றவாளிகளாக இருந்தவர்கள் யாவர் என்பதையும்;

(iii) மேற்படி இரு வகைகளையும் சேராதவர்கள் இருப்பின் அத்தகைய சிறைக் கைதிகளின் பெயர்கள் மற்றும் அவர்கள் புரிந்துள்ள குற்றங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3173/ '12

கௌரவ அனோமா கமகே,— சிறுவர் அபிவிருத்தி, மகளிர் அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2009 ஆம் ஆண்டு முதல் இன்று வரை இலங்கையில் இடம்பெற்றுள்ள பெண்கள் துஷ்பிரயோகங்கள் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகங்களின் எண்ணிக்கை ஆண்டு ரீதியாக வெவ்வேறாக எவ்வளவு என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி குற்றச்செயல்கள் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு துரிதமாக அதிகரித்துள்ளதென்பதையும்;

(ii) சம்பந்தப்பட்ட குற்றவாளிகளை சட்டத்தின் பிடியில் சிக்கவைப்பதில் இலங்கைப் பொலிசார் அசமந்தப்போக்கை வெளிப்படுத்துகிறார்கள் என்பதையும்;

(iii) மேற்படி சிறுவர் மற்றும் பெண்கள் துஷ்பிரயோகங்களில் அதிகளவான எண்ணிக்கைக்கு அரசாங்கத்துடன் தொடர்புடைய அரசியல்வாதிகள் மீதே குற்றம் சுமத்தப்பட்டுள்ளதென்பதையும்;

(iv) இதன் காரணமாக இவர்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளல் போதியளவு இடம்பெறுவதில்லை என்பதையும்

அவர் ஏற்றுக் கொள்வாரா?

(இ) (i) சம்பந்தப்பட்ட அமைச்சு, நன்னடத்தை சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம் மற்றும் சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை ஆகியன பெண்கள் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகங்களைத் தடுப்பது தொடர்பாக மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி குற்றச்செயல்களைத் தடுப்பதற்காக UNICEF போன்ற சர்வதேச நிறுவனங்கள் மற்றும் இந்நாட்டில் செயற்படுகின்ற வேறு அரச சார்பற்ற நிறுவனங்களின் பங்களிப்பைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iii) ஆமெனில், இது தொடர்பாக மேற்கொள்ளப்படும் பணிகள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3202/ '12

கௌரவ பி. ஹரிசன்,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கைக்கு விதை வகைகளை இறக்குமதி செய்கையில், பெரிய வெங்காயம், பூசணிக்காய், கறிமிளகாய், புடலங்காய், மிளகாய். தக்காளி, பீர்க்கங்காய், வெள்ளரிக்காய், கெக்கரிக்காய், பயற்றங்காய், பப்பாசி, பயறு, பாகற்காய் மற்றும் நிலக்கடலை ஆகிய பயிர் வகைகளில் வருடாந்தம் இறக்குமதி செய்யப்படும் விதைகளின் அளவு;

(ii) இறக்குமதி செய்யப்படும் மேற்குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு விதை வகையிலும் தனியார் துறையினாலும் கமத்தொழில் திணைக்களத்தினாலும் இறக்குமதி செய்யப்படும் அளவு;

(iii) மேற்குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு விதை வகையினதும் ஒரு கிலோவிற்கான விலை

வெவ்வேறாக யாது என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் மேற்குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு பயிரினதும் விதைகளின் அளவு வெவ்வேறாக யாது;

(ii) மேற்படி அளவுகள் உள்நாட்டு விதை வகைகளின் தேவையை பூர்த்தி செய்வதற்குப் போதுமானதா;

(iii) மேற்குறிப்பிடப்பட்ட விதை வகைகளை உள்நாட்டுப் பண்ணைகளில் உற்பத்தி செய்வதாயின், விவசாயிகளுக்கு அவற்றை வழங்கக்கூடிய விலை யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2322/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2010, 2011, மற்றும் 2012 ஆகிய வருடங்களில் 9 மாகாண சபைகளுக்கும் ஒதுக்கப்பட்ட மொத்த நிதியையும்;

(ii) மேற்குறிப்பிடப்பட்ட வருடங்களில் ஒவ்வொரு மாகாண சபையிலும் நிதி ஒதுக்கப்பட்ட அமைச்சுக்களைத் தனித்தனியாகவும்

அவர் கூறுவாரா?

(ஆ) 2010, 2011, மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில்,

(i) ஒவ்வொரு மாகாண சபையினாலும் அரசாங்க ஒதுக்கீடுகளிலிருந்து செலவிடப்பட்ட தொகையையும்;

(ii) மாகாண சபையினால் ஈட்டப்பட்ட பணத்திலிருந்து மேற்கொள்ளப்பட்ட செலவினத்தின் பெறுமதியையும்;

(iii) அரசாங்க கொடையாகவும், வருமானப் பங்காகவும் ஒவ்வொரு மாகாண சபையினாலும் பெறப்பட்ட தொகையையும்;

(iv) ஒவ்வொரு மாகாண சபையினதும் வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறைத் தேவைப்பாடுகள் எவ்வாறு நிவர்த்தி செய்யப்பட்டன என்பதையும்;

தனித்தனயாக அவர் கூறுவாரா?

(இ) சொல்லப்பட்ட மாகாண சபைகளுக்கு மத்திய அரசாங்கத்திடம் இருந்த அதிகாரங்கள் தரமாகப் பெறப்பட்டதன் பின்னர்அவற்றின் வருமான சேகரிப்பு முறைமை முன்னேற்றமடைந்துள்ளதா என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2445/ '12

கௌரவ புத்திக பத்திரண,— நீர் வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை நில்வலா கங்கையின் பண்டத்தர பிரதேசத்தில் உப்புநீர்த் தடை அணைக்கட்டொன்றை நிர்மாணிப்பதற்காக திட்டங்களை வகுத்துள்ளதா என்பதையும்;

(ii) மேற்படி அணைக்கட்டினை நிர்மாணிப்பதன் மூலம் அடைவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற நோக்கங்கள் யாவையென்பதையும்;

(iii) அத்தகைய அணைக்கட்டொன்று நிர்மாணிக்கப்படுமெனில் அதற்காக செலவிட எதிர்பார்க்கப்படும் பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி நிதி ஏற்பாடுகள் உள்நாட்டு மூலங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்படுமா இன்றேல் வெளிநாட்டு மூலங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்படுமா என்பதையும்;

(v) மேற்குறித்த அணைக்கட்டினை நிர்மாணிப்பதற்காக நிதி வழங்கும் நிறுவனம் அல்லது நிறுவனங்கள் மற்றும் ஒவ்வொரு நிறுவனத்தினாலும் வழங்கப்படுகின்ற பணத் தொகை வெவ்வேறாக யாவையென்பதையும்;

(vi) பண்டத்தர பிரதேசத்தில் உப்புநீர்த் தடை அணைக்கட்டொன்றை நிர்மாணிப்பதன் மூலம் பெருமளவிலான விவசாய நிலங்களின் பயிர்ச் செய்கைகள் பாதிப்புக்கு உள்ளாவதாக பிரதேசத்திலுள்ள விவசாயிகள் குற்றஞ்சாட்டுகின்றனரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2512/ '12

கௌரவ சஜித் பிரேமதாஸ,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) வட மாகாணத்தின் சம்பத்நுவர பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசத்தில் வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களுக்காக 2010, 2011 மற்றும் 2012ஆம் ஆண்டுகளில் செலவிடப்பட்ட மொத்தப் பணத் தொகை யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) தற்போது குறித்த பிரதேசத்தில் காணப்படும் கிராமிய வீதி முறைமை முழுமையாக சேதமடைந்துள்ளதென்பதை அவர் அறிவாரா?

(இ) (i) மேற்படி வீதிகளை புனரமைக்கத் தேவையான மொத்தப் பணத் தொகையை வழங்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) சேதமடைந்துள்ள மேற்படி வீதிகளைப் புனரமைப்பதற்கு எடுக்கும் காலம் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2699/ '12

கௌரவ தயாசிறி ஜயசேகர,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2005 முதல் 2012 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதிக்குள் ஆண்டுதோறும் இறக்குமதி செய்யப்பட்ட பாம் எண்ணெய் அளவு வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) அக் காலப் பகுதிக்குள் ஒரு கிலோகிராம் பாம் எண்ணெய்க்கான இறக்குமதி வரி மாற்றியமைக்கப்பட்ட விதம் யாது என்பதையும்;

(iii) இறக்குமதி வரி அவ்வாறு மாற்றியமைக்கப்பட்டமைக்கான காரணம் யாது என்பதையும்;

(iv) தற்போது உள்நாட்டுச் சந்தையில் பாம் எண்ணெய் மற்றும் தேங்காய் எண்ணெய் கிலோ ஒன்றுக்கான சில்லறை விலை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) பாம் எண்ணெய் இறக்குமதியின் போது தளர்வான வரிக் கொள்கையொன்றை கடைப்பிடித்தமை காரணமாக இலங்கையின் தேங்காய் எண்ணெய் உற்பத்தி வீழ்ச்சியடைந்துள்ளதென்பதையும்;

(ii) தேங்காய் எண்ணெய் உற்பத்தி வீழ்ச்சி அடைந்தமை காரணமாக தெங்குச் செய்கையாளர்களுக்கு தமது உற்பத்திகளுக்கான நியாயமான விலை கிடைப்பதில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2985/ '12

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புறக்கோட்டை – கோட்டையை அண்டியதாக நடைபாதை வர்த்தகத்தில் ஈடுபட்ட சுமார் 1500 சுயதொழில் வியாபாரிகளுக்கு இற்றைவரை மாற்று வர்த்தக நிலையங்கள் கிடைக்கவில்லை என்பதையும்;

(ii) 'திவிநெகும' கருத்திட்டத்தின் கீழ் சுயதொழில் வியாபாரிகளுக்காக நடைமுறைப்படுத்தப்பட்ட 'டிமோ பட்டா கருத்திட்டத்தின்' கீழ் நடமாடும் வாகனங்களை பயன்படுத்தி வியாபாரம் செய்கின்றபோது மோட்டார் வாகன பொலிஸ் மற்றும் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளின் நிர்ப்பந்தம் காரணமாக பல்வேறு சந்தர்ப்பங்களில் மேற்படி வர்த்தகர்கள் கடும் சிரமங்களுக்கு உள்ளாகின்றார்கள் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) தற்போது மாற்று வர்த்தக நிலையங்கள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ள நடைபாதை வர்த்தகர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) 'திவிநெகும' திட்டத்தின் கீழ் 'டிமோ பட்டா' வாகனங்கள் வழங்கப்பட்டுள்ள வர்த்தகர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) இவர்கள் தமது வர்த்தக நடவடிக்கைகளை தடையின்றி நடத்திச் செல்வதற்குத் தேவையான வசதிகள் செய்துகொடுக்கப்படுமா என்பதையும்

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3203/ '12

கௌரவ பி. ஹரிசன்,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கைக்கு பீடைகொல்லிகளை இறக்குமதி செய்வதற்காக உரிமப்பத்திரம் வழங்கப்பட்டுள்ள நிறுவனங்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி ஒவ்வொரு நிறுவனத்தினாலும் 2005-2012 வரையிலான காலப்பகுதியினுள் இறக்குமதி செய்யப்பட்ட பீடைகொல்லிகளின் (கிருமிநாசினி, களைகொல்லி, பங்கசுகொல்லி) அளவு வெவ்வேறாக யாது;

(iii) மேற்குறிப்பிடப்பட்ட நிறுவனங்களில் தற்போது தடை செய்யப்பட்டுள்ளவற்றின் எண்ணிக்கை யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இறக்குமதி செய்வதற்கு முன்னர் பீடைகொல்லிகளின் தரத்தை பரிசீலிக்கும் செயல்முறையொன்று காணப்படுகின்றதா;

(ii) ஆமெனில், அது யாது;

(iii) இறக்குமதி செய்யப்பட்ட விவசாய இரசாயனப் பொருட்களில் ஆசனிக் மற்றும் மனிதர்களுக்கும் மிருகங்களுக்கும் தீங்கு இழைக்கும் ஏனைய மூலக்கூறுகளைக் கொண்ட பீடைகொல்லிகள் காணப்படுகின்றனவா;

(iv) ஆமெனில், குறித்த தீங்கு இழைக்கும் ஆக்கக்கூறுகளின் உள்ளடக்கத்தை பரிசீலிக்கும் நிறுவனங்கள் யாவை;

(v) குறித்த பரிசீலனைகளுக்கு அரச மருத்துவக் கல்லூரியின் அல்லது சுகாதாரத் திணைக்களத்தின் ஆய்வுகூடங்களின் ஒத்துழைப்பு பெறப்படுகின்றதா;

(vi) ஆமெனில், அந்த நிறுவனங்கள் யாவை;

(vii) மேற்குறிப்பிடப்பட்ட நிறுவனங்களிலிருந்து தரச் சான்றிதழ்கள் பெற்றுக்கொள்ளப்பட்டதன் பின்னர், பயிர்களுக்கு மேற்படி பீடைகொல்லிகள் விதந்துரைக்கப்படுகின்றனவா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) கமத்தொழில் திணைக்களம்,

(i) விவசாய இரசாயனப் பொருட்கள் தொடர்பில் தலையிடும் விதம் யாது;

(ii) இவற்றின் பாவனை தொடர்பில் விவசாயிகளை விழிப்புணர்வூட்டுவதற்காக நடைமுறைப்படுத்தியுள்ள வேலைத்திட்டம் யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?